ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 2-5-1995, செவ்வாய்க்கிழமை, காலை 10-00 மணிக்குக் கூடும். அனைவருக்கும் எனது இனிய மே நாள் வாழ்த்துக்கள் வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-41 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

118. பரம்பிக்குளம்--ஆளியாறு திட்டம் மண்டலம்--II-ல் அடங்கியுள்ள நிலங்களுக்கு விவசாயத்திற்காக நீர் வழங்குகையை முறைப்படுத்துவது குறித்து பொதுப்பணித் துறையின் 7-3-1995-ஆம் நாளிட்ட 168 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை. (1993-ஆம் ஆண்டு பரம்பிக்குளம்- ஆளியாறு திட்ட (நீர் வழங்குகையை முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1993) 9 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

148. கோரிக்கை எண் 32-வீட்டு வசதி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

149. கோரிக்கை எண் 33--நகர்ப்புற வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

TRUTH ALONE TRIUMPHS